## சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# உலக உடல் உறுப்பு தான தினம்

சென்னை, ஆக.10–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தனியார் மருத்துவ மனையுடன் இணைந்து வருகிற 13–ந் தேதி சென்னை சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் உலக உறுப்பு தான தினம் கொண்டாடப்பட உள்ளது.

உடல் உறுப்பு தானத்தின் அவசியம் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், உறுப்புதானம் பெற்றவர்களை கவுரவிக்கவும் மற்றும் மக்கள் தங்கள் உடல் உறுப்புகளை தானம் செய்வதை ஊக்குவிப்பதற்கும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலைய வளாகத்தில் ஒரு திறந்த இல்லம் அமைத்து, பல்வேறு உறுப்புகள் தானம் செய்யப்படுவதை காட்சிப்படுத்தப்படும்.

இத்துடன் பல்வேறு உறுப்பு தானம் செய்வோர்களும் அவர்களது நடவடிக்கைகளை நினைவுபடுத்தும் வகையில் கவுரவிக்கப்பட உள்ளனர்.